உ

# அம்பாள் திருவகுப்பு




காமாக்ஷி தாஸன்

காபிரைட்] 1931. [விலை அணா ௪

உ

ஸ்ரீ காமாக்ஷ்யை நமஃ

# அம்பாள் திருவகுப்பு

இதில்

தேவீ சீர்பாத வகுப்பு, கடைக்கணியல்
வகுப்பு, திருக்கொலு வகுப்பு, தேவீ
பராக்ரம வகுப்பு, தேவேந்திர
சங்க வகுப்பு, அம்பாள்
கொலு, முதலியன
அடங்கியுள்ளன.

இயற்றியவர்:—

(ஸ்ரீ காமாக்ஷி திருப்புகழ், அம்பாள் அஷ்டகமாலை,
தேவீ கிளித்தூது சதகம் முதலிய இயற்றிய)

காமாக்ஷி தாஸன்.

காபி ரைட்
ரிஜிஸ்டார்ட்

1931.

இதன் விலை
அணா 4.

IN

MEMORY OF

MY FATHER

THACHAKKADU

RAMASWAMY AYYAR

என் தந்தை

தக்ஷகவனம்

இராமஸ்வாமி அய்யர்

ஞாபகார்த்தமாக.

உ

ஸ்ரீ காமாக்ஷியை நம:

# முகவுரை

ஸ்ரீ காமாக்ஷி திருப்புகழ், அம்பாள் அஷ்டக மாலை, தேவீ கிளித்தூது சதகம், இவற்றோடு சந்தகுரு அருணகிரி நாத ஸ்வாமிகள் ஷண்முகன் திருவகுப்பு இயற்றியிருத்தல் போல் அம்பாள் திருவகுப்பு என்னும் இந்நூலை தேவியின் அநுக்ரகத்தை முன்னிட்டு இயற்றலானேன். இதில் அம்பாள் கொலு வீற்றிருக்கும் பெருமையையும் அழகையும் கொலு வகுப்பிலும், அம்பாள் பாத மகிமையை சீர்பாத வகுப்பிலும், கடைக்கண் வீக்ஷணத்தின் விசேஷத்தைக் கடைக்கணியல் வகுப்பிலும், தேவியின் லீலைகள் முழுமையும் தேவீ பராக்ரம வகுப்பிலும, தேவியின் பக்தர்களின் பெருமையை தேவேந்திர சங்க வகுப்பிலும் சொல்லப்பட்டிருக்கிறபடியால் இது தினப்படி பாராயணத்திற்கும் பஜனைக்கும் பயன்படுவதோடு அம்பாள் திருவருளையும் கூட்டும் என்பது எளியேன் துணிபு.

இந்நூலைப் படிப்பவர்க்கு தேவியின் கடாக்ஷம் பரிபூரணமாக உண்டாகும்படி பிரார்த்திக்கும்,

R. சோமசுந்தரம் அய்யர்,
அட்வகேட்.
“குமாரவிலாஸ்”
மயிலாப்பூர், மதராஸ்.

அடியார்க்கடியன்,
காமாக்ஷி தாஸன்.

1—10—1931.

உ

ஸ்ரீ காமாக்ஷியை நமஃ

# விஷய அட்டவணை.

பக்கம்.


| | | | | |
|---|---|---|---|---|
| 1. | விநாயகர் ஸ்துதி | .... | .... | 1 |
| 2. | சீர்பாத வகுப்பு | .... | .... | 3. |
| 3. | கடைக்கணியல் வகுப்பு | .... | .... | 7 |
| 4. | திருக்கொலு வகுப்பு | .... | .... | 10 |
| 5. | தேவீ பராக்ரம வகுப்பு | .... | .... | 15 |
| 6. | தேவேந்திர சங்க வகுப்பு | .... | .... | 23 |
| 7. | அம்பாள் கொலு | ... | .... | 26 |
| 8. | வாழ்த்து | .... | ... | 28 |


மங்களம்.



# விநாயகர் ஸ்துதி.

1\. காட்டை: கண்ட ஆதி:

தந்தனந் தாத்த தந்தனந் தாத்த
தந்தனந் தாத்த தனதான.

ஐம்புலன் காத்து ஐந்துமென் றேத்து
மன்பர்தம் பாட்டி லருளாகி
ஐந்தையுண் டாக்கி ஐந்தையுங் காத்து
ஐந்தையுந் தாக்கு முருவான
அம்பைதன் மூத்த மைந்தனென் றேத்து
மைங்கரம் வாய்த்த பெருமாளே
அன்புடன் போற்றி யெந்தனெஞ் சாற்றி
அஞ்சலென் றூற்ற லருள்வாயே;
தம்பியன் றேத்த சஞ்சலந் தீர்க்க
தந்தியென் றூர்த்து வனமாதை
சங்கடங் காட்டி வண்குகன் காட்டில்
நன்மணங் கூட்டி யருள்காதா
நம்பியுன் தாட்க ளன்புகொண் டேத்து
நன்புகொண் டோர்க்கு மணியாகி
நன்பலன் காட்டி யின்பமுங் கூட்டி
நந்தியம் பாக்க முறைவாழ்வே.

**2.** காம்போதி or பியாக்: சாபு:

தனதய்யத் தானன தனதய்யத் தானன
தனதய்யத் தானன தனதான.

வினைவெள்ளத் தாலொரு மதமுள்ளக் கோதையை
விரகுள்ளத் தாலணை வகையாலே
விழுதுள்ளிப் போயொரு கருவுள்ளைத் தேடியெ
விதிகொள்ளிக் காயமொ டழியாதே
எனதுள்ளத் தேவளர் மலமுள்ளப் பேய்களை
எரிகொள்ளச் சீர்தரு சிவஞான
எழில்வெள்ளத் தாலெனை குதிகொள்ளப் பேணிடு
மிதமுள்ளப் பேறினை யருள்வாயே;
தினைமெள்ளக் கோதிடு மொருகிள்ளைச் சேனையை
தெறிகொள்ளப் போறிடு தவமேவு
திருவள்ளிக் காகவெ வெகு கள்ளத் தோடலை
சிறுபிள்ளைக் கோர்துணை யெனவாகி
சினமுள்ளப் பேரிப மெனமெள்ளப் பூவையை
திகைகொள்ளச் சீறியெ மணமாக
திருவுள்ளச் சீர்திகழ் அருள்வெள்ளச் சேயென
திருவல்லிக் கேணியி லுறைகோவே.

உ

ஸ்ரீ காமாக்ஷி துணை.



# 1. சீர்பாத வகுப்பு.

தோடி அல்லது பைரவி :] [கண்டசாபு.

தனனதன தனனதன தனனதன தனனதன
தனனதன தனனதன
தனதான தானதன.

அகரமுதல் உகரமிடை மகரமுடி யெனவருமோர்
அரியதொரு பொருளதனி
னுரையாகி வாழ்வதும்,
அரியசதுர் மறைகளிவை யருமையினி லருமையென
அநவரத முறையிடுமொ
ரரிதான மாநிதியும்,
அரிபிரம ராளுடனெ மகபதியும் அடிகளென
அடலுடனெ ஒருபரம
சிவபீட மேறுவதும்,

அதனிடையி லுலகுகளை யருளவல தவவடிவொ
டழகுமிகு பதுமமென
நிலையாகி மேவுவதும்,

அமரர்பதி யொடுசகல வமரர்களு முடல்குறுகி
அநுதினமு மலர்களுட
னடிபேணு மாதரவும்,

அவனிதனி லுளசகல முனிவர்களு மனமகிழ
அவர்களிரு நயனமிடை
அடையாள மாவதுவும்,

அசைவறவெ நினையுமவ ரிருவினைமு மலமுமற
அவர்களுள மதைமருவி
அழகாயு லாவுவதும்,

அமலமன துடனடிய ரிகபரமு மருள்பெறவெ
அரியபுக ழொடுநிதமு
மகலாது பாடுவதும், (1/4).

இகசுகமு மொருபரம சுகமுமருள் தருவதென
எளியனக மதைமருவி
இனிதாயு லாவுவதும்,

எளியன்முடி யதனையுமெ தனதெனவெ கருதியென
திருவினைமு மல்முமற
இசைபாட வவுவதும்,

இரவுபக லெனதுவல மிடமதினு மிருபுறமும்
எவர்பகையு மெளியனிட
மணுகாது பேணுவதும்,

இரவினிடை துயிலதனி லினிமைமிகு கனவுகளி
லெளியன்மன மதுகுளிர
வினிதாயு லாவுவதும்,

எமபடரு முயிர்கவர வெனதுமுனம் வருமளவி
லெதிர்கொ டவர் சிதறிவிழ
யவர்மார்பில் மோதுவதும்,

இடர்கலிகள் பிணிகளுட னெதுவினையு மெதுபயமு
மெளியனிட மொருபொழுது
மணுகாது சூழுவதும்,

இருணிறைய முலகமிசை வழியறிய வகையில்எனை
இணையிலொரு பதமுறவெ
துணையாகி வாழ்சுடரும்,

இனிமையுட னடிமைபுகழ் தனிலரிய வருள்சொரிய
இளகியதி லனவரதம்
அருளாகி வாழ்வதுவும், (½)

மகிமையொடு தருமமிகு மகபலியின் முடியதனை
மருவியதி லருளுடனே
அடியாக ஏகுவதும்,

மடுநடுவில் முதலைகவர் கரியலறல் விடுமளவில்
வரதவடி வுடனதனி
னுயிர்மீள வோடுவதும்,

மதலைமொழி யதனைவிடு தவறுமுகு மிரணியனை
வனபதியின் வடிவுகொடு
யவன்மார்பை யீருவதும்,

மகபதிதன் மகிமைதனை முழுதுமுணர் இளைவனுயிர்
மடியவென வருமறலி
உயிர்மாய வீசுவதும்,

மதலையமு குறலதுவெ வருமளவி லருமையொடு
மதுரமிகு வமுதமுட
னொருகாழி மேவுவதும்,

மதலைகண பதியுடனு மருமைமிகு முருகனொடு
மணிகள்கல கலவெனவெ
விளையாடல் கூருவதும்,

வனமதிடை யழகுமிகு பழயவடி வடையவென
வரியதொரு தவமியல
முனைமீது எறுவதும்,

மகபதியொ டருமைமிகு மவைதனிலோர் நடனமிட
மகிழ்வுடனெ பெரியதொரு
நடமாடி யாடுவதும், (¾)

உகமுடிவி லரியரனு மயனுமக பதியுடனெ
உளசகல வுயிரழிய
திருநீறு காணுவதும்,

உளபொருள்க ளிவையொழிய எவையுமில வெனுமறி
உளபடியெ யருளவல
குருவாகி மேவுவதும்,

உலகிலொரு கொடியெனவெ யலையுமெனை வளரவிடு
ஒருபொருளு முறுதுணையு
மெனவாகி வாழ்வதுவும்,

உயர்பெருமொ ருலகுரு அடிகருதி யுடன்வரவெ
ஒருநதியின் மணலினிடை
அடையாள மானதுவும்,

ஒருகுமரி வடிவுகொடு மதுரைதனி லரசுபுரி
உவகைமிகு மரசனிட
திருமார்பி லாடினதும்,

உலகிலரி தெனுநகரி லதிகருணை வடிவுகொடு
உளவிருளை யகலவிடு
முயர்காமகோடியெனும்

உமையமலை குமரிகுண தரிகவ்ரி பரசிவையு
முதுமறையி னடிமுடியு
மெனவாகி யோர்சிவனின்

ஒருவடிவில் அரைவடிவி யெனவொளிரும் அழகுடனெ
உலகமுழுத ருளியருள்
சிவகாமி சீரடியே.

உ

ஸ்ரீ காமாக்ஷி துணை



# 2. கடைக்கணியல் வகுப்பு.

கேதாரகௌளம், அல்லது பிலகரி. ஆதிதாளம்.

தனத்த னந்தன தனத்த னந்தன
தனத்த னந்தன தனத்த னந்தன.

எனைத்தி னந்தினம் வளர்க்க வும்பத
மிணைக்க வுந்தயை செழித்து நின்றதும்,
எனக்கு கந்தொரு தினத்தி லந்தமொ
டெனைக்க ரங்கொடு வணைக்க வந்ததும்,
எனக்கு வந்தொரு குருத்து வங்கொள
இரக்க முங்கொடு களித்து வந்ததும்,
எதற்கு மஞ்சவ தொழித்து வந்திடு
வெனச்சி றந்ததொ ரருட்சொ ரிந்ததும்,
எனக்கு கந்திக பரத்தி லுஞ்சுக
மிழைத்து யென்றுமெ னுளத்தி ருந்ததும்,
எதிர்த்து வந்ததொ ரெமக்க ணங்களை
எதிர்த்து நின்றெனை யணைத்து நின்றதும்,
இணைப்ப தந்தனை யுளத்து ளன்புட
னினைக்கு மன்பர்த முளத்த மர்ந்ததும்,
இனித்த செந்தமிழ் புகழ்ப்ப தங்களை
இசைக்கு மன்பரை யழைத்து நின்றதும், (¼)

வனத்[illegible]ந்தமொ டி[illegible]த்து வந்தொரு
[illegible]டன் [illegible]மிழைத்து வந்ததும்,
மண[illegible]ணபக [illegible]ந்த மார்ந்தடி
வழுத்தி வந்திடு சுரார்க்கு கந்ததும்,
மதத்து டன்பெரு செருக்கு டன்திரி
மனக்கு ரங்கினை யடக்கி வென்றதும்,
மதத்தை யுந்திரி புரத்தை யுந்தெறி
மகத்து வங்கொளு மியற்கை கொண்டதும்,
மதித்து என்செய லனைத்தை யுஞ்ஜெயம்
வரப்ப ரிந்தருள் கொழித்து நின்றதும்,
மறைத்த விந்த்ரிய விருட்டை வென்றெனை
மலர்ச்சி கொண்டிட வமைக்கு மன்பதும்,
மனத்தை யுங்கவ ரியற்கை கொண்டதி
மகத்து வங்கொடு மொளித்து நின்றதும்,
வருத்த முந்தவிர் திருத்த முந்தரு
மருட்க ளஞ்சிய மௌனத்தி கழ்ந்ததும், (1)

அனைத்தை யுந்தரு மியற்கை கொண்டுல
கனைத்தை யும்பயி லருட்டி கழ்ந்ததும்,
அருட்பி ழும்பறு முகத்தை யுங்கர
மணைக்க வந்தருள் படைத்து நின்றதும்,
அசைத்த தும்பியு மொடித்த தந்தமும்
வகித்த தந்தியை யழைத்து நின்றதும்,
அயிற்க ரங்கொளு மருட்கு ழந்தையை
அழைத்து வன்பொடு களித்தி ருந்ததும்,
அவைத்த லந்தனில் நடித்த சம்புவை
அழைத்த சுந்தர முடைத்து நின்றதும்,
அழைத்த சங்கரர் பதத்தி லன்பினை
யமைத்து வந்துமெ சுகித்தி ருந்ததும்,

அளித்த றங்களை வளர்த்து கஞ்சியி
லருட்சொ ரிந்திடு சிறத்தை கொண்டதும்,
அவித்தை யென்றொரு விருட் சிதைந்திட
அருட்பெ ருந்தகை யெனச்சி றந்ததும் $(\frac{3}{4})$

கனத்த கஞ்சியி லினித்த மர்ந்தவள்
கவித்து வந்தரு மருட்சு ரந்தவள்,
கருப்பு தண்டமு மலர்த்த அம்புமெ
கரத்தி லன்பொடு பிடித்தி ருந்தவள்,
களித்து வந்திக பரத்தி லுந்துணை
கதித்து வந்தெனை யுயர்த்த வந்தவள்,
கதிக்கு மம்பிகை விதிக்கு மம்பிகை
கயற்க ணம்பிகை யெனத்தி கழ்ந்தவள்,
கருத்த கொண்டையும் நெளித்த வந்தமும்
கனத்த குங்கும தனத்துடன் திகழ்,
கனித்த செங்கனி யிதழ்ச்சி றந்தவள்
கரததி லுங்கிளி பிடித்தி ருந்தவள்,
கருத்த வண்டென வொளித்து வன்பரை
கவர்ச்சி கொண்டிடு வனப்புடன் திகழ்
கயற்றி னங்களி ளியற்கை கொண்டொளிர்
கயற்க ணம்பிகை கடைக்கண ன்புமே. (1)

உ



# 3. திருக்கொலு வகுப்பு.

## மத்யமாவதி அல்லது சாவேரி: ஆதி.

அரவொடு யிளமதி நதியணி சடையினர்
  அணைந்து வலமே யிணைந்த தொருபால்
அருமறை களுமருள் ஒருசதுர் முகவனும்
  அடங்கி யெதிரே வணங்க வொருபால்
அரவிடை துயில்கொளு மடல்மிகு வடிவினன்
  அமர்ந்து யிணையே புகழ்ந்த தொருபால்
அமரர்க ளதிபதி உடலது குறுகியே
  அகந்தை யறவே வணங்க வொருபால்
சுரர்களு நரர்களு மினியகி னரர்களும்
  சொரிந்த புகழோ டிணங்க வொருபால்
சுருதியின் முறையினை முழுவது மறிபவர்
  சுரந்து மறையே பொழிந்த தொருபால்
இரவிபொ னுடலொளி மவுனிக ளறிவுட
  னிரங்கி யெதிரே திரண்ட தொருபால்
இருடிக ளனைவரு மவரவர் மனையொடு
  இணங்கி முடியே வணங்க வொருபால்; (1)

உலகினை நொடியினில் வலம்வரு குமரனு
முவந்து மடிமேல் விளங்க வொருபால்
ஒருகரி முகமதை யுடையவர் கவுரிதன்
உளங்கு ளிரவே நெருங்க வொருபால்
உலகுள கலைகளை யருளிய கலைமகள்
உகந்து யிடமே விளங்க வொருபால்
உலகுள பலவித திருவருள் திருமகள்
உவந்து வலமே விளங்க வொருபால்
பலபல அபிநவ வனிதைய ரெதிரிலே
பரந்த நடமே புரிந்த தொருபால்
பவவினை பொடிபட வ்ருதமுள வனிதையர்
பரிந்து கனியே கொணர்ந்த தொருபால்
அலகைக ளிரிசிகள் பலவகை முநிகளும்
அடங்கி முடியே சுழன்ற தொருபால்
அளவிட வரியபல் வலுவுடை யமரர்கள்
அடங்கி யெதிரே வணங்க வொருபால் (2)

தவமுடை யவர்நினை வதுதரு மொருதரு
தழைந்து குடைபோல் விளங்க வொருபால்
தரணியி லரணிய ம்ருகபதி தினமுமெ
தணிந்து பரிபோல் விளங்க வொருபால்
கவரிக ளமழுகொடு பணிவிடை வனிதையர்
கரங்கள் தனிலே விளங்க வொருபால்
கனிவகை தருமர வகைகளு மகிழ்வொடு
கனிந்த பழமோ டிலங்க வொருபால்
அவனியு லுளபல மலர்களு மகிழுவெ
அலர்ந்து மணமே சொரிந்த தொருபால்
அருணனு மதியுமெ யவரவர் கலைகளும்
அடங்கி விடவே பயந்த தொருபால்

நவவகை வலுவுடை வனிதைய ரழகுடன்
நவின்ற புகழே நிறைந்த தொருபால்
நவவகை க்ரஹமவை உடலது குறுகியெ
நயந்து பணியே பயின்ற தொருபால் (3)

களியொடு வகில்களு மரவகை பலபல
கசிந்து தளிரோ டிலங்க ஒருபால்
கருடனு மழகிய பறவைகள் பலவுமே
கலந்து முகில்போல் பறந்ததொருபால்
கிளியொடு குயில்களு மினியபுள் வகையுமே
கிணிங்கி ணெனபா விசைந்த தொருபால்
கிரணமோ டொளிசிதர் இருபதெ ழுடுவுமே
கிளம்பி யொளியோ டிலங்க வொருபால்
ஒளிமிகு கதிரவன் மதிவகை பலபல
உயர்ந்து வொளியே படர்ந்த தொருபால்
உலகுகள் பலவையு மவையுள உயிர்களும்
உணர்ந்து தொழவே மகிழ்ந்த தொருபால்
எளியனென் மனமவள் இணைமல ரடிதனி
விலங்கு மலர்போல் விளங்க வொருபால்
இணையடி தொழுமடி யவர்வினை யெதிரினில்
எரிந்து பொடியாய் விழுந்த தொருபால். (4)

வருசிவ னடியரு முருகன தடியரும்
வரங்கள் பெறவே நிரம்ப வொருபால்
வருமடி யவரிடம் வலியச னதம்வர
மகிழ்ந்து அருளே பொழிந்த தொருபால்
குருவிட மடியவ ருபதேச மதனையெ
குவிந்த கரமோ டுணர்ந்த தொருபால்
குறுகித னடிபணி யடியவர் வ்ரதமொடு
கொணர்ந்த கனிதாய் அருந்த வொருபால்

திருமகள் கலைமகள் திருமணி தருபசு
சிறந்த அடியார்க் கிணங்க வொருபால்
ஜெய ஜெய ஜெய ஜெய ஜெய ஜெய் வெனவெ
திகழ்ந்த அடியார் முழங்க வொருபால்
சுருதிக ளுடனவ ளழகிய புகழினை
சொரிந்த அடியார் கணங்க ளொருபால்
துணையிது வென அவள் மலரடி யுணர்வொடு
தொடர்ந்து பணிவோர் கணங்க ளொருபால். (5)

திருமதி யெனவரு திருமுக மதனிலெ
தெளிந்த நகையே திகழ்ந்த தொருபால்
திருநுத லொளிபெற ம்ருகமத திலகமெ
திருந்த வழகோ டிலங்க வொருபால்
இருகய லென்விரு விழிவெகு கருணையொ
டிலங்கு அருளை பொழிந்த தொருபால்
இருசிலை நிகரென யழகுடை புருவமு
மிணைந்து அழகோ டிலங்க வொருபால்
அருமணி யுடனொளிர் அரியதொர் ஒயிலுடன்
அரும்புகுமிழ் நாசியங்க வொருபால்
அருமையொ டிருகுழை செவிதனி லொளியுட
னமைந்து ஒளியோ டிலங்க வொருபால்
அரியதொர் கனியென யிருவித ழினிமையொ
டெழுந்த அழகே சிவந்த தொருபால்
அரியதொ ரழகுடன் வரியுடை கமுகுமெ
இசைந்த மணியோ டசைந்த தொருபால் (6).

கருநிற முகிலென வருகுழ லழகொடு
கமழ்ந்து வளைவோ டமைந்த தொருபால்
கருவளை சரிவுறு காமதி லழகொடு
கருப்பு சிலையோ டரும்பு மொருபால்

அருதனி ரெனவரு விரல்களி லொளிவிடு
அருங்க விழைமோ திரங்கள் ஒருபால்
அணிகளு மணிகளு நிறையுபொன் மகுடமும்
அணிந்த அழகே திகழ்ந்ததொருபால்
பருமை யொ டெழுமிரு வருள்சொரி தனமிசை
படிந்த மணிமா லைதொங்க வொருபால்
படியு மோர் கொடியிடை தனிலொளி மிகவிடு
பசும்பொ னணியோ டிசைந்த தொருபால்
திருவடி வதனுட னொளி மிக சிதறிடு
சிவந்த உடையே பரந்த தொருபால்
திருவடி தனிலொரு சதுர்மறை ஒலியிடு
சிலம்பு மிசையோ டிலங்க வொருபால். (7)

புவியினி லுளமிக தவமுடை யடியவர்
புகழ்ந்த யிசையோ டெழுந்த ஒலியாய்
புவியினி லருள்மிகு பதியிலு நதியிலும்
புகுந்து பெருவாய் நிறைந்த அருளாய்
புவியினி லுளபல அசைவுள பொருளிடை
புகுந்து அரிதாய் விளங்கும் உயிராய்
புருவம திடையினி லசைவற நினைபவர்
புரிந்த தவமே தெழுந்த சுடராய்
கவியரு ணகிரி தனருள்மிகு புகழிடை
கலந்து அழகோ டிலங்கு மருளாய்
கதியென வருமுன தடிமைதன் மொழியிடை
கசிந்த மணமோ டிசைந்த அருளாய்
செவிதனி லினியதொர் தொனியிடு பொருளினோர்
தெளிந்த உரையே மொழிந்த குருவாய்
திருவுடை வடிவொடு சிவபுர மதனிடை
சிறந்த உமையா ளிருந்த கொலுவே. (8)

உ

ஸ்ரீ காமாக்ஷியை நம:



# 4. தேவீ பராக்கிரம வகுப்பு.

பிலகரி or மோகனம்  சாபு or ஆதி தாளம்,

தனனதன தத்ததன தனனதன தத்ததன
தனனதன தத்ததன தனதான தானதன.

சகலவித விக்கினமு நொடிதனி லகற்றவல
தனிமுழு முதற்கடவுள்
தமையீயு மாதுமையும்,

சரணென வழுத்துமவ ரிகபரசு கத்தையருள்
சரவணப வக்கடவு
ளருள்தாயு மானவளும்,

சதுர்முக னியற்றியதொ ரரியதவ மெச்சியவர்
தருமதலை தக்ஷனிட
மகளாகி வாழ்பவளும்,

சயனமிடு மச்சுதர்த மிருசெவியு தித்தவரை
சமரினுயி ரைத்தொலைய
ஹரிமேவு சோதரியும்,

தமனதூத வத்திலுமை யழுகையுற விட்டவிழி
தவறிவிட மற்றொருபொன்
விழியீயு மாசிவையும்,

தவமதலை விக்கியழ முலையமு தளித்தருளி
தமிழுலக முய்த்தொளிர
வொருகாழி மேவினளும்,

சகலபுக ழைத்தருமொர் கவுணியகு லக்குழவி
தருபுகழ தற்கிசைய
விருதாள மீபவளும்,

தவமுடிவி னைத்தெரிய வகைதனையு ணர்த்துமென
சடைமுடிய ரைக்குருவு
மெனலீலை யாடினளும்,

தனதனத னத்ததன யெனமுனம் நடித்தசிவன்
தனிநடன மிட்டிடவெ
அதிமோக மானவளும்,

தவறுமிகு தக்ஷனுயிர் அழியவெச பித்து மவர்
தருமகம ழித்திடவெ
யொருவீரர் காளிதமை

தலமிசைய னுப்பியவன் தலைதனைய றுத்தபினம்
சதுர்முகவ னுக்கெனவெ
யுயிர்மீள யீபவளும்,

தலையுமறு பட்டஹரி யசுவமுடி பெற்றெழவெ
தயவுமிக வுற்றொளிரு
மொருதாயு மானவளும்,

தவறியந திச்சடையர் ஐயனெனவு ரைத்தஹரி
அரவுருவெ டுத்திடென
வொருசாப மீபவளும்

தவமிகுமு னிக்கரிய சுகரெனுமு யர்ச்சிபெறு
தனையனைய ளித்தருளு
மகதேவி யானவளும்,
தவசிகள் சபிக்கவுரு வழிபடு மிலக்குமிமை
தனதுருவ முற்றொளிர
யருளீயு மாதுமையும்,
சமரமிடு துர்க்கனையொர் நொடிதனி லழித்துவிடு
சகமகிழு துர்க்கையெனு
மொருகாளி யானவளும், (¼)
அகிலமது சிட்டிகையி லுலவுருக னுனக்கரிய
அயிலதுகொ டுத்தருளு
மரிதான மாசிவையும்,
அருணகிரி செப்பியரு ளருணிறை திருப்புகழி
லருளதுகொ ழித்தருளு
மெனதாயு மானவளும்,
அரியதொர்த வத்தையிடு மலையரய னுக்கருமை
மகளெனவு தித்தருளு,
மரிதான பார்வதியும்,
அழகொடுக திச்சடையர் உளமதுக ளித்திடவெ
அவரைமண முற்றொளிரு
மபிராம நாயகியும்,
அசுவபதி புத்திரியொர் கவுரிவிர தத்திலவள்
கணவனுயிர் பெற்றெழவெ
யருள்மாசு வாஸினியும்,
அசுரரைம யக்கியொரு சுராமுத முற்றொளிர
அழகுவடி வைத்தமைய
னுறுமாறு யீபவளும்,

அருணிறைப தக்கிலணி நவமணிதெ றித்துவிழு
அரியநவ சக்திகளை
அருளீயு மாதுமையும்,
அரனைமய லுற்றவர்கள் கருவதுக னத்தலற
அடல்மிகுமி லக்குமரும்
நவவீரர் யீபவளும்,
அசுரர்தமை வெற்றிகொள படைகளைய னுப்பிமகன்
அறுமுகவ னுக்கருளு
மொருதாயு மானவளும்,
அரியஜம தக்கினிதன் மனைவியைச பித்திடவு
மவள்தவ மியற்றிடவெ
யொருரேணு காவெனவெ,
அடனுடனெ ளித்தடியர் கருதியத ளித்தருளி
அவர்கள்சுக முற்றொளிர
அருள்தேவி யானவளும்,
அமையினருள் பெற்றவொரு சுதர்சனனை யுற்றபகை
அழியவருள் சக்திவெ
யிரவான காலமதில்,
அமையடிவ ழுத்திவரு மடியர்சுக முற்றொளிர
அதிகருணை யுற்றொளிரு
மரிதான தாயுமையும்,
அரன்விழிம றைத்ததொரு பிழையதுவி லக்கிடவெ
அருமைமிகு கச்சியிடை
தவமீயு மாரணியும்,
அடனுடனெ முப்பதிரு அறமதைவ ளர்த்திடுமோர்
அருமைமிகு பச்சையுமை
யெனுமேக நாயகியும்,

அரியமது ரைப்பதியி லமைதனில ழுத்தினவொர்
அரியவனி தைக்கருளி
யொருசேயு மானவளும், (½)

மகிமைமிகு முத்தனமு மிருகயல்வி ழுத்திகழு
மதுரையா சிக்குமரி
மகாராஜி மீனவளும்,

மகிமைமிகு திக்விஜய மதனிலெ நதிச்சடையர்
எதிரிடவி டைத்தனமு
மறைநவாகி யேவிடவு

மதுரைதனி லச்சிவனை மணமொடு சுகித்துறையு
மறைகள்புகழ் சக்தியுமை
மகமாயி யானவளும்,

வைணவன் மனைக்கொரு கவுரியென வுற்றசிறு
குழவியுரு பெற்றசிவ
னிடமாக மேவினளும்,

வலிமைமிகு ரக்தபிஜ னுதிரம தொழித்திடவு
மவனுயிர சிதைத்தருளு
மொருகாளி யானவளும்,

மதனுமெரி பட்டதொரு மலைதனி லுதித்தவனு
மடியவொரு சக்திதிரி
புரையான மாசிலையும்,

மயனுடன ழைத்தவிரு யசுரரை பொழித்தவொரு
வலிமைமிக வுற்றசிவை
மகமாயி யானவளும்,

வலிமையொ டெதிர்த்தவிரு அசுரர்தமை வெற்றிகொள
வலிமைமிகு சப்தவித
மிளமாத ரீபவளும்,

மகிமைமிகு சப்தரிஷி யவர்களிடு மக்கினியில்
வருமசுரர் செத்துவிழ
திரிசூலி யானவளும்,

மகிஷனென ரக்கனொடு புலிமுகவ ரக்கனையு
மடியவொரு துர்க்கையெனு
மொருகாளி யானவளும்,

மதமதுபி டித்தருரு சிவையையு மணத்திடவெ
தவசுடரெ ழுப்பியிட
யதிகோர ரூபமுட

னவனது முடித்தலையை நொடிதனி லறுத்துதிர
மமுதெனகு டித்துவிடு
மதிகோர காளிகையும்,

மதிசடைய ரிச்சைகொள கவுரிவடி வுற்றொளிர
தவமமையி யற்றவொரு
துணையான மாபுலியை

மகிமையது பெற்றொளிர தனதுதிரு வுட்படியெ
தலைமையது பெற்றிடவெ
யருளீயு மாசிவையும்,

மமதைமிகு மச்சுரர்கள் சமர்புரிசெ ருக்கழிய
அரனிடுவெணுத் தகர
வியலாது நாணுறவு

மமரர்கள்ம யக்கமதை நொடிதனி லகற்றியருள்
வனிதையுவ திக்கவுரி
யுமையான பார்வதியும், (௩௪)

பகையுடைய தக்ஷன்மக மழியவிடு சக்திகலை
மகள்குமிழி னைத்தகர
வதுமீள யீபவளும்,

பகவதிய ரிப்பிரம ரரியதொ ருருத்திரனு
மவரவர் பணிப்பயில
வலியீயு மாசிவையும்,

பலரையும ழித்தபையை மயலுடனெ திர்த்தவொரு
பகையசுர னைத்தொலைய
ஒருவாளை வீசினளும்,

பரகருணை யுற்றசிவை பரசிவனி வற்குளெவர்
பலமுளரெ னப்பகைகொள்
இருமூடர் சாபமுற,

பருகழுகெ னத்தினமு மமைதனைவ ழுத்தியவர்
பழையவடி வுற்றுளிர
வருளீயு மாசிவையும்,

பரமசிவனைத் தொழுது சிவையவம தித்தவொரு
யிருடிதனை சக்தியற
பலஹீன ளாகிடவும்

பரசிவனு மற்றுமொரு பதமதுகொ டுத்துபர
சிவையினது சக்திதனை
யுபதேச மாயருள

பரகருணை யுற்றானி னைரவடிவ முற்றுளிரு
மருமைமிகு சக்தியெனு
மபிராம நாயகியும்,

பகரவெளி தற்றவருள் நிறையுமோர் தவத்தலமுள்
வளருமொர்த ளிக்குமரி
யெனவாகு மோகினியும்,

பதமதைவ ழுத்தினவொ ரடியரிடு சொற்கிணைய
படியதுக ளிக்கயிருள்
நிலவாக வேயருளும்

பரகருணை யுற்றவொரு திரிபுரைசொ லற்கரிய
　　மகிமைமிகு மற்புதைய
　　　　மபிராமி யானவளும்,
பதமதனை நித்தமுனி யுருகிடுமெ னக்கரிய
　　யிகபரசு கத்தையருள்
　　　　துணையாகி வாழ்பவளும்,
பலவுலகி னைப்பயிலு மொருதனிமு தற்பொருளு
　　மெதுவுமழி பட்டபொழு
　　　　தொருகாளி யாகிவளர்,
படியிலுயர் கச்சிதனி லதிகருணை யுற்றடியர்
　　பலநிதியு முற்றிருளிர
　　　　வருள்தாயு மானவொரு,
பரசிவைப ரத்தையரு ளனுபவைவ ரைக்குமரி
　　பகவதித வச்சுடரு
　　　　மொருகாம கோடியெனும்,
பயிரவியு முக்தருள மதனிலுறை கற்பகமும்
　　வடிவொடு சிறக்குமொரு
　　　　சிவகாமி நாயகியே. (1)

ஸ்ரீ காமக்ஷ்யைநம:

# 5. தேவேந்திர சங்க வகுப்பு.

*ராகம் :—பூரிகல்யாணி— தாளம் :—சங்கீர்ன ஜம்பை.*

அருமறை முறைதரு மருடரு மிருசா
ணபயவ ரதமொடு
பாசாங்குச முந்திகழ்
மாசாம்பவி சஙகரி,
அரியர னயனுட னமரர்க ளனைவரு
மநவர தமுமக
லாதோங்கி புகழ்ந்திடு
சீர்தாங்கி மகிழ்நதவள்,
அடலொடு படியது கிடுகிடு கிடுவென
வதிரிட வாளொடு
மாதாண்டவ முங்கொடு
பாராண்டு கொளுங்குயில்,
அகிலபு வனமரு ளாறுபவை பரசிவை
அமலைநி மலையடி
யார்சாந்தவு ளந்தனி
லேசார்ந்து திகழ்ந்தவள், (1/4)
இருணிறை யெளியனை யருணிறை கருணையொ
டிகபர சுகமுற
சேய்போன்று பரிந்தருள்
தாய்போன்று சுரந்தவள்,
எவையெவை கருதிட லவையவை யருளிடு
மெழில்மிகு தருவென
வேகாம்பரர் பங்குறை
மோகாங்க சுமங்கலை,

எனதிடர் கலிகளு மலகைகள் பலவையு
மெரிகொள விடுமொரு
தீபோன்று திரண்டெழு
கார்போன்ற பயங்கரி,
எமபட ரெனதுயிர் கவரிட வருமுன
மிடியென யவரிடை
யேபாய்ந்து சினந்திடு
மோர்வாய்ந்த பெருந்தகை, (½)
உருவமு மருவமு முளமது முலகது
முதலுள பொருளனு
மூலாம்பிகை ரஞ்சித
பாலாம்பிகை செஞ்சுடர்,
உவதிப வதிபக வதிபயி ரவிதிரி
புரைகவு ரிபுனிதை
யோகாம்பிகை மங்களை
மோகாம்பிகை செந்தமி
ழுலவிய மதுரையி லெழுதரு வடிவுட
னுயர்பெறு மதிபதி
தானும்படி வந்தொளிர்
மீனும்பிகை யிந்திரை,
முழுவது மழகிய வடிவொடு பரசிவ
னுளமுரு கிடமண
நூல்பூண்டு திகழ்ந்ததி
மால்பூண்டு மகிழ்ந்தவள், (¾)
மருவிடு மடியர்க ளிருவினை மலமொடு
மறுபிற வியுமற
மாசாந்த பதந்தரு
வேதாந்த பரம்பரை,

மதிநிகர் வதனியு மரகத வடிவியு
மதுரவச னியெனு
மாகாந்தி யுடன் திகழ்
ஏகாந்த சுகந்தரு
மன்மயுமை யிமகிரி தருமக ளடிதொழு
மடியவ ருளமிசை
வாழ்வாம்படி கஞ்சியி
லோர்வாய்ந்திடு மம்பிகை
மலரடி யநுதின முறையொடு பணிசெயு
முடியவ ருறைவிட
மாராய்ந்து வணங்குவர்
தேவேந்திர சங்கமே, (1)

# அம்பாள் கொலு.

"மந்திர மேன்குவ" மெட்டு.

**புன்னாகவராளி : ஆதி.**

திங்கைய ணிந்தவ ரோடு வந்திட
பாகமு றைந்தழ காயி ருந்துமொர்
சங்கைய ணிந்தவர் தாள்பு கழ்ந்திட
நாலுமு கங்கொளும் வேத பங்கயர்
கண்டுந டுங்கிடி தாள்ப ணிந்திட
கர்முகி லென்றொரு மேனி கொண்டிடு
தந்தியோடே
கங்கையில் வந்ததொ ராறு திங்களு
மானமு கங்கொளும் வேலர் வந்துமெ
கொஞ்சுச லங்கையொ டாடி மிஞ்சிடு
மாவனு டன்மடி மீது றைந்திட
கஞ்சமு றைந்ததொர் மாம டந்தையு
மெங்குநி றைந்தருள் நாம டந்தையும் வந்துசூழ
மங்கையர் வந்தடி யேபு கழ்ந்திட
மாவடி யன்பர்கள் தாள்ப ணிந்திட
அந்தண ரும்மறை யேசொ றிந்திட
தேவர்கள் நின்றுமெ சீர்பு கழ்ந்திட
ரம்பையர் வந்தழ காய்ப ரந்ததொர்
மாநட னம்புரி சீர்சி றந்திட அன்புமீறி
வந்தனை யென்றுமெ பாடு மன்பர்கள்
மாவினை சிந்திட வேமு ழங்கிட
அஞ்சுபு லன்களை யேம றந்துமெ
ஆறுத லங்களி லேக லந்திடு
மந்த மிகுந்ததொர் மேனி கொண்டிடு
யோகியர் வந்தடி யேபு கழ்ந்திட சந்தமோடே

சங்கமு டன் திரு நாம முந்தின்
மோதிடு மன்பர்க ளேசி றந்திட
கந்தரை யண்டியெ சேர்சி றந்தவர்
காலனை வென்றவர் மாசி லன்பர்கள்
சந்தத மும்புகழ் பாடி வந்திட
நாரத ரும்பல வாய்பு கழ்ந்திட அந்தமோடே

சஞ்சல முந்தவிர் தேனு வுந்திகழ்
ஓர்தரு வுங்குடை போல் தழைந்திட
பண்டுகள் தந்திடு மாம ரங்களு
மாமலர் தந்திடு வாச னம்பல
பொன்னொடு திங்களு மேதி கழ்ந்திட
மாவுடு வும்பல வாய்க்ர ஹாரங்களு யர்ந்து வீச

சிங்கமெ னும்பரி மீத மர்ந்தழ
கோடுமு கந்தனி லேம லர்ந்ததொர்
புன்னகை யுந்திகழ் சீரு மன்பரை
வாழவை கண்களும் பாதி யென்றதொர்
திங்களு முந்திகழ் கார்க ருங்குழ
லோடுக ரங்களில் பாச வங்குசம் கொண்டு மேவி

சிந்தையு வந்துமெ காம கஞ்சியில்
சீலமு டன்சிவ காமசுந்தரி
அந்தமு டன்கொலு வோட மர்ந்துமெ
தாயென வந்தெனை யாளவென்றுமென்
சிந்தைய மர்ந்துமெ நாளு மென்றுமெ
சீர்பெற மங்கள மேதழைந்திட வந்து வாழ்வாய்.

மங்களம்.

## வாழ்த்து.

…பியாக் : ஆதி.

வா[illegible] வாழ்க வாழ்க வாரணர்க்கு அன்னையே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வேலவர்க்கு மன்னையே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க மூவர்கட்கு மன்னையே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க ஏவுயிர்க்கு மன்னையே ;

வாழ்க வாழ்க வாழ்க லோக மேழளித்த அன்னையே
வாழ்க வாழ்க வாழ்க ஒரு மேழைகட்கு மன்னையே
வாழ்க வாழ்க வாழ்க யீசர் வாம முற்ற அன்னையே
வாழ்க வாழ்க வாழ்க வேதம் நாலளித்த அன்னையே ;

வாழ்க வாழ்க நாலு ஞம மோதுசித்தர் அன்னையே
வாழ்க வாழ்க யோகி யோர்கள் ஜோதியொத்த அன்னையே
வாழ்க வாழ்க காளி ரூப ஆதிசக்தி அன்னையே
வாழ்க வாழ்க காம ரூப காமகச்சி அன்னையே;

வாழ்க வேயு ஞம மோது மாசு அற்ற தொண்டரே
வாழ்க வேயி வேழை யேனை வாழ வைக்கு மன்புமே ;
வாழ்க வேதி வாழ்க வேதி சீர்சிறகக என்றுமெ
வாழ்க காம கோடி பீட மேல்சிறக்கு மன்னையே.

மங்களம்.

சுபமஸ்து.

PRINTED AT THE "NOBLE PRESS" TRIPLICANE, MADRAS.

உ

காமாக்ஷி தாஸரால் இயற்றப்பட்ட

# தேவீ பரமான இதர நூல்கள் :—

## 1. ஸ்ரீ காமாக்ஷி திருப்புகழ்.

இதில் ஸ்ரீ கஞ்சி காமாக்ஷி, மதுரை மீனாக்ஷி, கற்பகாம்பாள், அபிராமி அம்மன், விசாலாக்ஷி முதலிய அம்பிகைகள் பேரில் திருப்புகழ் நடையில் 63 பாட்டுகளுடனும் கண்ணிகள் சிந்து முதலியன 9 பாட்டும் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—12—0

இந்த நவராத்திரி வரை 0—-8—0

## 2. அம்பாள் அஷ்டகமாலை.

இதில் லலிதா அஷ்டகம், காமாக்ஷி அஷ்டகம், மீனாக்ஷி அஷ்டகம், கற்பகாம்பாள் அஷ்டகம், அகிலாண்டேஸ்வரி அஷ்டகம், சிவகாம சுந்தரி அஷ்டகம், திரிபுரஸுந்தரி அஷ்டகமும், அம்பாள் வாரமாலை, ஸ்ரீ காமாக்ஷி ஸ்தோத்ரங்கள் அடங்கியுள்ளன.

இதன் விலை அணா 0—6—0

## 3. தேவீ கிளித்தூது சதகம்.

இது எளிய நடையில் தேவியின் கிளியைத் தேவியிடம் தூது அனுப்பி அம்பாள் அருளினைக் கூட்டிவைக்க வேண்டுதல். இதில் 64 சக்திபீட வர்னனையும், இதரபீட வர்னனையும் இருப்பதால் நவராத்ரியிலும் மற்றுமுள்ள விசேஷ தினங்களிலும் பாராயணத்திற் குரியது. சிறு பாலர்களும் சுலபமாய் வாசிக்கக் கூடியது.

இதன் விலை அணா 0—4—0

---

இப்புத்தகங்கள் கிடைக்குமிடம் :—

1. R. சோமசுந்தரம் அய்யர்,
அட்வகேட்.
"குமர விலாஸ்" மயிலாப்பூர், மதராஸ்.

2. பி. டி. பாணி கம்பெனி,
565, பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.